**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 2 - 2023**

---

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 2 இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 மே 18 ஆம் திகதிய 3625-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02(அ) பிரிவு மற்றும் 3626-எஸ்ஆர்ஜ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02(அ) பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன.

நிகழ்ச்சித்திட்டப் பகுதியில் விவசாயம், குடிநீர் மற்றும் வணிக நோக்கங்களிற்காக நீர் வளங்களை பாதுகாப்பாக அணுகுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். வடமத்திய மாகாண கால்வாய் நிர்மாணம் மற்றும் வடமேல் மாகாண கால்வாய் நிர்மாணங்கள் ஆகிய இரண்டு கூறுகளின் கீழ் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 38,177.67 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 242 மில்லியனானதுடன் அதில் ரூபா 33,129.39 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 210 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 5,048.28 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நிகழ்ச்சித்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 திசெம்பர் 13 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தல் திகதி 2025 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

நிகழ்ச்சித்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமத்திய மாகாண கால்வாயை நிர்மாணிப்பதன் மூலம், மஹாகனதராவ நீர்த்தேக்கத்திற்கு நீர் கிடைக்கும் அதேவேளை, மஹகந்தராவ நீர்த்தேக்கத்தின் நீரைப் பயன்படுத்தி ரம்பேவ மற்றும் மதவாச்சி பிரதேசங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு ரூபா 11,515 மில்லியன் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகாவராண்மையிடமிருந்து பெறப்பட்ட கடனுடனும், இலங்கை அரசாங்கத்தின் நிதியுடனும் அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதன் பணிகள் நிறைவடையும் தருவாயில் இருந்த போதிலும் வடமத்திய மாகாண கால்வாய் செயற்திட்டம் குறித்த காலத்திற்குள் நிறைவேற்றப்படாமையால், இச்செயற்திட்டத்தின் நீர் மஹாகனதரவ நீர்த்தேக்கத்திற்கு வரும் வரை அந்த குடிநீர் செயற்திட்டம் நடைமுறைப்படுத்த முடியாத நிலையிலேயே இருந்தது. | இணங்கப்பட்டது. | முன்னுரிமைப் பணிகளைக் கண்டறிந்து, செயற்திட்டத்தின் குறிப்பிட்ட காலத்தை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிகழ்ச்சித்திட்டம் 2025 ஆம் ஆண்டு முடிவடைய உள்ளது, அதற்குள் மொரகஹகந்த நீர்த்தேக்கத்திலிருந்து கனதர ஓயா வரை 96 கிமீ தூரம் செல்லும் வடமத்திய மாகாண கால்வாயின் 27.7 கிமீ நீளமான சுரங்கப்பாதையை மாத்திரம் தற்போது பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக, எஞ்சிய 68.3 கிமீ கால்வாயை அமைத்து, முழு செயற்திட்டத்தின் நலனையும் பெறுவதற்கான உறுதியான திட்டம் கணக்காய்வு திகதி வரை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதி ஒப்பந்த பொதிகளின் பெறுகைகளிற்கான அனைத்து ஆவணங்களும் தயாராக உள்ளன. எந்த நேரத்திலும், நிதி ஒதுக்கீடுகள் கிடைத்தவுடன் கேள்வி கோரப்பட்டு வழங்கப்படலாம். நிதியை ஏற்பாடு செய்வதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் பல்வேறு சர்வதேச நிதியளிக்கும் முகவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகிறது. | மீதமுள்ள பணிகளுக்காக உறுதியான திட்டத்திற்கு நடவடிக்கை எடுத்து, குறிப்பிட்ட காலப்பகுதியினுள் நிர்மாண பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 5 மகாவலி வலயங்கள் மற்றும் "குருலு வெவ பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுக்கு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கலப்பின மிளகாய் விதைகளுக்காக 50 அலகுகள் பொலித்தீன் கூடாரத்தை (Poly Tunnel) வழங்கி நிறுவும் உப செயற்திட்டம் ரூபா 91.57 மில்லியன் ஒப்பந்த பெறுமதியில் நிறைவேற்றப்பட்டது. இதற்காக தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர், மோசமான நிதிச் சாத்தியக்கூறு கொண்ட அரசாங்க நிறுவனம், 2018-2020 காலப்பகுதியில் நட்டம் அடைந்து, 2021 இல் இலாபம் ஈட்டியதால், பொலித்தீன் கூடாரத்தை அமைப்பதில் முன் அனுபவம் இல்லாதவராவார். ஊடன்படிக்கையின் பிரகாரம் பணிகள் 2023 மே 15 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும், ஆனால் 2024 ஏப்ரல் 30 அளவில் 42 பொலித்தீன் கூடாரங்கள் மாத்திரமே நிறுவப்பட்டன, மேலும் மூன்று முறை 2024 மே 31 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டது. | பூர்த்திசெய்வதற்கான சமீபத்திய காலத்தைத் தாண்டிய ஏதேனும் தாமதங்கள் (2024 மே 31) ஒப்பந்தத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். | சரியான திட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், நீடிக்கப்பட்ட திகதிக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தொடர்புடைய பணிகளை மேற்பார்வை செய்தல். |
| (ஈ) | நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2018 ஆம் ஆண்டில் ரூபா 7,146.91 மில்லியன் செலவில் வழங்கப்பட்ட களுகங்கை - மொரகஹகந்தவை இணைக்கும் சுரங்கப்பாதை அமைப்பதற்கான ஒப்பந்தத்தின் பணி 2021 செப்தெம்பர் 10 இல் பூர்த்தி செய்யப்பட இருந்தது, குறிப்பிட்ட காலத்திற்குள் இதனை பூர்த்தி செய்ய இயலாமை காரணமாக, அது 2023 திசெம்பர் 21 வரை நீடிக்கப்பட்டது. எனினும், அத் திகதியில் உள்ளவாறு, நிர்மாண முன்னேற்றம் 90 சதவீதம் ஆகும். மேலும் ஒப்பந்தம் 2024 மே 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு மதிப்பிடப்பட்ட போதிலும் 2023 திசெம்பர் 21 இற்கு அப்பால் நீடிப்புகள் எதுவும் வழங்கப்படவில்லை. | 2024 ஆகஸ்ட் 31 வரையிலான மற்றொரு நீடிப்பு, நிலையான அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டு அமைச்சரவை அங்கீகாரத்திற்காக நிலுவையில் உள்ளது. | ஒப்பந்தம் தாமதமானதற்கான காரணங்களை விசாரணை செய்து பூர்த்தி செய்வதற்கு உரிய கால அவகாசத்தை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2018 முதல் 2023 வரையிலான காலப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட நிதியை குறைவாகப் பயன்படுத்தியதால் செயற்திட்டத்தால் ரூபா 229.23 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணம் செலவிடப்பட்டிருந்தது. | பல்வேறு காரணங்களால் செயற்திட்ட செயலாற்றல் மெதுவாக இருந்தது. | அலட்சியத்திற்கான காரணங்களை விசாரணை செய்து, திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மேற்படி கால்வாய் நிர்மாணத்தின் போது, மின்னேரியா-கிரித்தலே இயற்கைக் காப்பகம், சிகிரியா சரணாலயம், மின்னேரியா தேசியப் பூங்கா மற்றும் குருலு வெவ காப்புக்காடு ஆகியவற்றிற்குள் கால்வாய் நிர்மாணிக்கும் பணியை வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் வெட்டி மூடுதல், இரட்டை வழித்தடம் அல்லது சுரங்கப்பாதை முறைகள் மாத்திரமே பயன்படுத்தி மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருந்தது. எனினும், செயற்திட்டம் அதனுடன் இணங்காமல் 02 சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரங்களைப் பயன்படுத்தி சுரங்கங்களைத் தோண்டி, அதிக விலை கொண்ட முறையான தண்ணீரை நகர்த்தும் முறையைத் தெரிவுசெய்தது, இது தொழில்நுட்ப ரீதியாக பொருத்தமானது, தேசிய அளவில் பயனுள்ளதுடன் சுற்றாடலுக்கு குறைந்த தாக்கம் கொண்ட முறையாகும். | இணங்கப்படவில்லை. NCPCP கால்வாயின் திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் அமுல்ப்படுத்துதல் ஆகிய நிலைகளின் போது, தொழில்நுட்ப ரீதியாக பொருத்தமான, தேசிய அளவில் பயனுள்ள மற்றும் சுற்றாடலுக்கு குறைந்த தாக்க முறைகளை முழுமையாக பூர்த்தி செய்து EIA இன் நிலைமைக்கு இடமளிக்க சாத்தியமான ஒவ்வொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பெரும்பாலான பகுதிகளில் இரட்டை வழித்தடம் மற்றும் சுரங்கப்பாதை வெட்டி மூடப்பட்டிருந்தன. | சரியான தொழில்நுட்பம் மற்றும் பயனுள்ள முறைகள் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ஆலோசனை நிறுவனம் ஒரு சுரங்கப்பாதை அமைக்கும் இயந்திரத்தை உற்பத்தி செய்து, இறக்குமதி செய்து, போக்குவரத்து செய்து மற்றும் நிறுவுவதற்கான கிரயத்தை ரூபா 7,255.40 மில்லியனிற்கு மதிப்பிட்டிருந்தது. ஒப்பந்ததாரர் அதற்காக ரூபா 6,690.97 மில்லியன் கூறுவிலையை சமர்ப்பித்திருந்ததுடன் 02 இயந்திரங்களின் இறக்குமதியின் போது செயற்திட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியலின் பிரகாரம் 02 இயந்திரங்களின் CIF பெறுமதிகள் முறையே ரூபா 2,147.97 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10,581,673 மற்றும் ரூபா 3,523.61 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9,476,342 ஆகும். அதன் பிரகாரம் ஆலோசனை கம்பனி ஒரு இயந்திரத்தின் பெறுமதியை உறுதிப்படுத்தாமல், அளவீட்டு பட்டியலை தயாரிக்கும் போது இந்த உருப்படிக்கான மதிப்பீட்டை தயார் செய்திருந்தது. | மதிப்பிடப்பட்ட பெறுமதியையும் CIF பெறுமதியையும் ஒப்பிட முடியாது. பொறியியலாளர் மதிப்பீட்டின் பெறுமதி, தயாரிப்பின் எதிர்பார்க்கப்படும் CIF பெறுமதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் இறக்குமதியுடன் தொடர்புடைய அனைத்து வரிகள், கையாளுதல் கட்டணங்கள், துறைமுகத்திலிருந்து தளத்திற்கு போக்குவரத்து செய்தல், நிறுவல் அசெம்பிள் செய்தல், தொடங்குதல் மற்றும் இயக்குதல் + இலாபம் (mark – up) ஆகியவற்றை உள்ளடக்கியது. | அனைத்து தொடர்புடைய வளமூலங்களையும் காரணிகளையும் கருத்தில் கொண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | சீனாவிலிருந்து இறக்குமதி செய்து, 1வது சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரத்தின் பணியிடத்திற்கு கொண்டு செல்வதற்காக ரூபா 6,690.97 மில்லியன் மொத்தக் கிரயம் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்ட போதிலும் | • போட்டி கேள்வி பெறுகை நடைமுறை இந்த ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br>• அமைச்சரவை அங்கீகாரம் | கிரயம் தொடர்பாக விசாரணை செய்து, மேலதிக கொடுப்பனவுகள் இருந்தால் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | திருகோணமலை துறைமுகத்தில் இருந்து சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரத்தின் இருப்பிடத்திற்கு விடுவிக்கப்பட்டதன் மூலம் மூலம் அதன் கிரயம் ரூபா 2,155.97 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம், திருகோணமலையில் இருந்து (டி) நமல்புரத்திற்கு இயந்திரத்தை கொண்டு செல்வதற்கும் அசெம்பிள் செய்வதற்கும், ஒப்பந்ததாரரின் இலாபத்துக்காகவும், இயந்திரத்தின் மொத்த கிரயத்தில் 68 சதவீதமாக உள்ள ரூபா 4,535 மில்லியன் உள்ளமை கணக்காய்வில் சர்ச்சைத்தன்மையானதாகும். | மூலம் கணிசமாக பதிலளிக்கக்கூடிய மிகக் குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட கேள்விதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.<br>• மொத்த உருப்படிகளுக்கு (3.4.1.1) கோரப்பட்ட விலைவிகிதம் கேள்விதாரர் கோரிய போட்டி விலையாகும்.<br>• ஒப்பந்த ஏற்பாடுகளின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | வேண்டும். |
| (ஈ) | 02வது சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரத்தை சீனாவில் இருந்து இறக்குமதி செய்து பணியிடத்திற்கு கொண்டு செல்வதற்காக ஒப்பந்ததாரருக்கு ரூபா 6,690.97 மில்லியன் கூட்டுமொத்த தொகையை செலுத்துவதற்கு இணங்கி. ரூபா 6,021.87 மில்லியன் 2024 மார்ச் 15 அளவில் செலுத்தப்பட்டிருந்தது. திருகோணமலை துறைமுகத்தில் இருந்து சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரம் விடுவிக்கப்பட்ட நேரத்தில், அதன் கிரயம் ரூபா 3,635.61 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் திருகோணமலையிலிருந்து கோந்துருவ வரையிலான போக்குவரத்துக்கும் இயந்திரத்தை அசெம்பிள் செய்வதற்கும் ரூபா 3,055.36 மில்லியன் அல்லது கிரயத்தில் 46 சதவீதம் செலுத்தப்பட்டமை மற்றும் ஒப்பந்ததாரரின் இலாபம் கணக்காய்வில் சர்ச்சைக்குரியதாகும். | மேலே கொடுக்கப்பட்ட பதிலைப் பார்க்கவும். | கிரயம் தொடர்பாக விசாரணை செய்து, மேலதிக கொடுப்பனவுகள் இருந்தால் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | ஒப்பந்தம் வழங்குவதில் 2½ ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டதால், ஒப்பந்தத்தின் பூர்த்தி செய்தல் திகதி 2027 மார்ச் 10 ஆகும். செயற்திட்டத்தின் துரிதப்படுத்தலின் கீழ், 2025 யூன் மாதம் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு துளையிட்டு வெடிக்க வைத்தல் முறையின் கீழ் நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்த 10.4 கிமீ தூரத்தின் நிர்மாணத்திற்காக 2வது சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரத்தை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது. அங்கு, அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு, 2வது சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்கு பரிந்துரைத்திருக்கவில்லை. பின்னர் | • 2 TBM இயந்திரங்களுடன் திருத்தப்பட்ட ஒப்பந்த காலம். (2025 யூன் 8)<br>• இயற்கையில் இந்த செயற்திட்டத்தைப் போலவே நீர் உட்புகுதல் உமா ஓயா செயற்திட்டத்தின் அனுபவத்தை மேலும் மதிப்பாய்வு செய்வதற்காக பெறுகை செயன்முறை 2 ½ ஆண்டுகளுக்கு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.<br><br>இரண்டாவது TBM ஐப் பயன்படுத்துவதற்கான | இந்த கொள்வனவு இரண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களால் பரிந்துரைக்கப்படாத போது விசெட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமித்து, பரிந்துரைகளைப் பெற்று, அதிக விலைக்கு இந்த சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரத்தை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்த தரப்பினர் இதற்கு பொறுப்பானவராவர். எனவே, அந்த தரப்பினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். கோள்வனவு |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சின் செயலாளர் விசேட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமித்திருந்தார், மேலும் அந்தக் குழுவும் முன்மொழிவின் சாத்தியக்கூறு சந்தேகத்திற்குரியது என்றும் ஒப்பந்தத்திற்காக மேலதிக நிதி முதலீடு செய்ததை நியாயப்படுத்த முடியாது என்றும் பரிந்துரைத்திருந்தது. அந்தக் குழுவின் முடிவும் ஏற்கப்படவில்லை, மறுசீரமைக்கப்பட்ட விசேட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு 2வது சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரத்தைப் பயன்படுத்த பரிந்துரைத்திருந்தது. இது தொடர்பாக, 2021 ஒக்தோபர் 14 இல் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தில், அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சாதகங்களைக் கருத்தில் கொண்டு, செயற்திட்டத்திற்கான பொறியியலாளரின் பரிந்துரை மற்றும் ADB இன் இணக்கப்பாட்டுடன், அமைச்சரவை தேவையான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. ADB நிதியுதவி (MFF) கிடைக்கும் காலத்திற்குள் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்தலின் அவசியத்தன்மை தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படுகிறது. | தொடர்பான அனைத்து விடயங்களும் அமைச்சரவைக்கு தெரிவிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | பணி மதிப்பீட்டின் பிரகாரம் ஒப்பந்தத்தின் முடிவில் 2 சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரங்களை அகற்றி அவற்றை துறைமுகத்திற்கு கொண்டு செல்வதற்கான அளவிடை பட்டியலில் ரூபா 179.99 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறான நிலையில், ரூபா 13,381.94 மில்லியன் பெறுமதியான 2 இயந்திரங்களுக்கு செலுத்தப்பட்ட கிரயத்தில் நியாயமான தொகையை அறவிடுவதற்கு உடன்படிக்கை மூலம் உடன்படாததுடன், 2 இயந்திரங்களையும் இலவசமாக நாட்டிற்கு வெளியே கொண்டு செல்வதற்கு இணக்கம் காணப்பட்டது. | • இந்த நடவடிக்கைகள் அனைத்தும் கேள்விதாரர்கள் தமது கேள்வியை சமர்ப்பித்த கேள்வி ஆவணத்தின் தொழில்தருநரின் தேவைக்கு ஏற்ப உள்ளன.<br>• இயந்திரங்களுக்கு செலுத்தப்படும் தொகையானது ஒப்பந்தத்தின் மொத்த தொகை விகிதங்களாக இணங்கப்படுகின்றன. | ஒப்பந்தத்தின் முடிவில், 02 இயந்திரங்களை மீள் ஏற்றுமதி செய்யும் போது ஒப்பந்ததாரரிடமிருந்து ஒரு நியாயமான தொகையை மதிப்பீடு செய்து அறவிட வேண்டும், அதற்காக ஒப்பந்த உடன்படிக்கையின் தொடர்புடைய உட்பிரிவுகள் திருத்தப்பட வேண்டும். |
| (எ) | புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் இதுவரை கால்வாயின் 3வது சுரங்கப்பாதையில் சுரங்கம் தோண்டும் இயந்திரத்தைப் பயன்படுத்தி தோண்டுவதற்கு அனுமதியை வழங்கியிருக்கவில்லை. எனினும், தற்போது செல்லுபடியாகும் சுரங்க அனுமதியைப் பயன்படுத்தி 1வது சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரத்தைப் பயன்படுத்தி 5.77 கிமீ சுரங்கப்பாதை தோண்டப்பட்டிருந்தது. | EIA இலும் GSMB இடமிருந்து உரிமம் பெறுவது அவசியம் என்று குறிப்பிடப்படவில்லை. செயற்திட்டக் கூட்டத்தின் போதும் GSMB இன் உத்தியோகத்தர்கள் உடனிருந்த போதிலும் அவர்களில் யாரும் அத்தகைய உரிமத்தின் அவசியத்தை குறிப்பிடவில்லை. செயற்திட்ட பணிப்பாளர் GSMB இடம் தேவை குறித்து எழுத்துமூலம் விசாரித்தார் ஆனால் இதுவரை பதில் வரவில்லை. | சுரங்க உரிமம் GSMB இடமிருந்து பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | சுரங்கப்பாதையின் பலவீனமான பாறைப் பகுதிகளில் கொங்கிறீட் வளையங்களை (வளையம்) பொருத்துவதற்கு ரூபா 2,892.3 மில்லியன் மதிப்பிடப்பட்டதுடன் ரூபா 928.72 மில்லியன் மற்றும் ரூபா 149.82 மில்லியன் முறையே ஒரு வளைய உற்பத்தி தொழிற்சாலை மற்றும் ஒரு களஞ்சியத்தின் நிர்மாணத்திற்காக காணப்பட்டது. எனினும் 2024 சனவரி 31 இல் உள்ளவாறு சுரங்கப்பாதையில் நிறுவப்பட்ட 2,967 கொங்கிறீட் வளையங்களில், 1,298 வளையங்கள் அல்லது 44 சதவீதம் வெடிப்பு ஏற்பட்டதென அடையாளம் காணப்பட்டது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் தொடர்புடைய BOQ உருப்படிகள் அல்லது அடையாளம் காணப்பட்ட வெடிப்புக்கள் தொடர்பான தள பதிவுகளுடன் சரியாக பொருந்தாத போதிலும் குறித்த நிகழ்வு நிகழ்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளின் பிரகாரம் பொறியியலாளர் மற்றும் ஒப்பந்ததாரரின் வல்லுநர்கள் காரணங்களையும் திருத்துவதற்கான முறைகளையும் கண்டறிவதில் ஈடுபட்டுள்ளனர். தொழில்தருநரும் நடந்துகொண்டிருக்கும் பரிகார செயன்முறைகளில் அதிக கவனம் செலுத்தியுள்ளார். | இப்பிரச்னையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 27.7 கிமீ சுரங்கம் தோண்டும் ஒப்பந்தத்தின் முன்னேற்றம் 21 சதவீதமாக இருந்தது. ஒப்பந்தத்தில் விலை அதிகரிப்பிற்காக செலத்துவதற்கு ரூபா 3,001.79 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 அளவில் ரூபா 5,131.24 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 2,129.45 மில்லியன் அமைச்சரவை அங்கீகாரத்தை பெறாமல் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. | அமைச்சரவையால் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த விலையை விட மொத்த செலவினம் அதிகமாக இருந்தால் ஒப்பந்த விலையை திருத்துவது பொதுவான நடைமுறையாகும். இன்னும் இந்த குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் இந்த நிலை ஏற்படவில்லை. | மேலதிக கொடுப்பனவுகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

## 2.3 விளைவற்ற வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட 2வது சுரங்கப்பாதை துளையிடும் இயந்திரத்தை 2023 மார்ச் முதல் 2024 மார்ச் வரை தற்காலிகமாக இயக்க வேண்டாம் என அமைச்சரவை முடிவு செய்ததன் காரணமாக, இயந்திரம் நிறுவப்பட்ட பின்னர், 2023 மார்ச் முதல் 8 மாதங்கள் விளைவற்றிருந்தது. 2023 நவம்பர் 23 முதல் செயற்பாடு தொடங்கப்பட்டது. அத் திகதி முதல் 2024 பெப்ரவரி 29 வரை 3 மாதங்களுக்கான சுரங்கப்பாதை தோண்டும் முன்னேற்றம் 400 மீற்றர் குறைந்தபட்ச அளவில் இருந்தது. | குறித்துக்கொள்ளப்பட்டது. | செயற்திட்டப் பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**2.4 தீர்க்கப்படாதிருந்த முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட உரத்தின் இருப்பு விவசாய அமைச்சின் கீழ் உள்ள 02 உர கம்பனிகளிடம் கையளிக்கப்பட்ட போது, ரூபா 55.23 மில்லியன் பெறுமதியான 161.5 மெற்றிக் தொண் (3,230 மூடைகள்) உரத்திற்கு தட்டுப்பாடு நிலவியது. | இந்த விடயம் குறித்து விசாரணை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவல் 2024 அளவில் நிதிக்கூற்றுக்களில் "குறிப்பாக" வெளிப்படுத்தப்படும். | உரிய பொறுப்புள்ள தரப்பினரிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மேலும் நிதிக்கூற்றுக்களில் நட்டம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**2.5 காணி சுவீகரிப்புக்கள் தொடர்பான சிக்கல்கள்**

செயற்திட்டத்தின் மூலம் 644 தனியாரின் காணித்துண்டுகள் சுவீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 385 காணித்துண்டுகள் மாத்திரமே சுவீகரிக்கப்பட்டிருந்தன, அவற்றின் உரிமைத்துவம் எதுவும் மாற்றப்பட்டிருக்கவில்லை.